ரூ. 5.00

தமிழ் ஆண்டு 2039
சித்திரை - ஏப்ரல் 2008

மக்கள் சிந்தனை

சமய சமுதாய இலக்கிய
திங்களிதழ்



அருள் நெறித் தந்தை அவர்களின்
13ஆவது குருபூசை விழா
20-04-2008
திருவடிகளைப் போற்றி வணங்குகின்றோம்

சிறப்பாசிரியர் : தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்

மக்கள் சிந்தனை

சமய சமுதாய இலக்கிய திங்களிதழ்

விளம்பரக் கட்டணம்

விவரம்	அளவு	1 வெளியீடு	12 வெளியீடு
பின் அட்டை வெளிப்புறம்	1 பக்கம்	ரூ. 750	ரூ. 7500
அட்டை உட்புறம்	1 பக்கம்	ரூ. 650	ரூ. 6500
இதழ் உட்புறம்	1 பக்கம்	ரூ. 500	ரூ. 5000
இதழ் உட்புறம்	1/2 பக்கம்	ரூ. 350	ரூ. 3500

சந்தா விவரம்

தனி இதழ்	ரூ.	5-00
ஆண்டுச் சந்தா	ரூ.	60-00
ஆயுட் சந்தா	ரூ.	600-00
புரவலர் கட்டணம்	ரூ.	1000-00

சந்தா - விளம்பரம் அனுப்பவேண்டிய முகவரி :

நிர்வாகி,

மக்கள் சிந்தனை

குன்றக்குடி - 630 206

தொலைபேசி எண். 04577 - 264227

ஆதீன இணையதள முகவரி :

website : www.kundrakudiadheenam.org.

ஆசிரியர்

மரு. பரமகுரு

அச்சிட்டு வெளியிடுவோர் :

சண்முகநாதன் அச்சகம், குன்றக்குடி.

மக்கள் சிந்தனை

நிறுவனர் : தவத்திரு குன்றக்குடி அடிகளார்

தமிழ் ஆண்டு 2039 மாதம் : சித்திரை

மணி : 23 இதழ் : 4

தொடரும் தமிழ்ப் பயணம்

இந்தியாவின் மான்செஸ்டர் என்று அழைக்கப்படுகின்ற மும்பை மாநகரத்துத் தமிழ்ச் சங்கத்தின் விழாக்களுக்கு நீண்ட நாட்களாக நமக்கு அழைப்பு வந்த வண்ணம் இருந்தது. இந்த ஆண்டு அந்த அழைப்பை ஏற்றுக்கொண்டு நான்கு நாட்கள் ஏப்ரல் திங்கள் (4.04.2008 முதல் 7.04.2008 வரை) பயணம் மேற்கொண்டோம்.

உலகப் பொருளாதாரத்தைத் தீர்மானிக்கின்ற வல்லமை மும்பை மாநகரத்திற்கு உண்டு. இந்தியாவின் ஆட்சித் தலைநகரம் தில்லியாக இருந்தாலும் வணிகப் பொருளாதாரத் தலைநகரமாக மும்பை திகழ்கின்றது. நாள்தோறும் சராசரியாக தொடர்வண்டிகளில் சுமார் 65 லட்சம் பேரும் பேருந்துகளில் 35 லட்சம் பேரும் பணிகள் நிமித்தம் சுற்றுப்பகுதி நகரங்களில் இருந்து மும்பைக்கு பரபரப்பாய் பயணிக்கின்றனர்! ஏப்ரல் திங்கள் நான்காம் நாள் சென்னையில் இருந்து வான் ஊர்தி வழியாக மும்பைக்கு இந்திய நேரம் சுமார் 12 மணிக்குச் சென்று அடைந்தோம். நம்மை தமிழ்சங்க அன்பர்கள் ராமமூர்த்தி, மலர் அரசன், அரிகரன், சீர்வரிசை சண்முகராசா, அவர்களின் அருமை மகனும் புதிய "தமிழ் லெமூரியா" பத்திரிகை ஆசிரியருமான குமணராசா, நங்கை குமணன் சரவணன் ஆகியோர் அன்புடன் வரவேற்றனர்.

அன்று மாலை 7 மணி அளவில் நவி மும்பைத் தமிழ்ச் சங்கத்தில் வரவேற்பு நிகழ்ந்தது. திருவாசகத்தின் சிறப்புகள் பற்றி நாம் உரையாற்றினோம்! தில்லையில் திருவாசகம் அரங்கேற்றுவதற்கு நடந்த போராட்டத்தைப் பற்றியும் பேசினோம். மறுநாள் 5.04.08 அன்று மைசூர் அசோசியேசன் அரங்கில் "தமிழ் லெமூரியா" மாத இதழ் -

அற்புதமான இலக்கிய இதழ் வெளியீட்டு விழா! நூல் ஆசிரியர் குமணராசா, சீர்வரிசை இதழ் ஆசிரியர் சண்முகராசா ஆகியோர் தலைமையில் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் D.சிவானந்தம் அவர்கள் முன்னிலையில் நிகழ்ந்தது. கண்டரமாணிக்கம் சேது குமணன் பெற்றுக்கொண்டார். டாக்டர் சுதா சேசையன் உரையாற்றிட நங்கை குமணன் மற்றும் திரளான தமிழ்ச் சான்றோர்கள் கலந்து கொண்ட விழா அரங்கேறியது! "தமிழ் லெமூரியா" இதழை வெளியிட்டு

"நமக்குத் தொழில் கவிதை
நாட்டுக்கு உழைத்தல்
இமைப்பொழுதும் சோராது இருத்தல்"

என்று பாரதி எழுத்தைத் தவமாகப் போற்றியதையும் குறிப்பிட்டோம். பல உயிர்களைத் தியாகம் செய்ய கண்ணீராலும் செந்நீராலும் எழுப்பப்பட்ட முல்லைப் பெரியாறு நீர்த்தேக்கத்தை பென்னிகுக் என்ற இங்கிலாந்து தேசப் பொறியாளர் தம் சொந்தப் பணத்தில் எழுப்பித் தந்தது போல ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கு ஜப்பான் தேசம் உதவி செய்தும், தம் சொந்தச் சகோதரர்கள் ஒத்துழைப்பு நல்காது இருப்பதும் வேதனைக்குரியது. என்பதைக் குறிப்பிட்டு உரையாற்றினோம்!

5.04.08 மாலை 7 மணியளவில் பம்பாய்த் தமிழ்ச் சங்கத்தில் அதன் தலைவர். திருமிகு. என். ஜெயராமன் அவர்கள் தலைமையில் "தொண்டர்தம் பெருமை" என்ற தலைப்பில் உரையாற்றினோம்.

6.04.08 மாலை 6 மணி அளவில் பம்பாய்த் தமிழ்ச்சங்க அரங்கில் பம்பாய்த் தமிழ்ச் சங்கத் தலைவர் திருமிகு. என். ஜெயராமன் அவர்கள் துணைத்தலைவர்கள், உறுப்பினர்கள், கலந்துகொள்ள குறள்நெறி பற்றி உரையாற்றினோம். வள்ளுவம் வாழ்க்கை நெறி ஆகவில்லை என்பதை வேதனையுடன் குறிப்பிட்டோம்! இனியேனும் வள்ளுவம் காட்டும் வாழ்க்கை நெறியில் பயணம் செய்வோம் என்பதைக் குறிப்பிட்டு நிறைவுரையாற்றினோம். தமிழ்ச்சங்க அன்பர்களும் நண்பர்களும், சான்றோர்களும் நல்ல தமிழ் உணர்வோடு செயல்படுவது சிறப்புக்குரியது. வற்றாது ஜீவநதி பாயும் மராத்தி மண், மாவீரன் சிவாஜி ஆண்ட பூமி! சுதந்திர வேள்வியை அடைகாத்த பால கங்காதர திலகர் வாழ்ந்த தியாகபூமி. அமைதியுடனும் நல்லிணக்கத்துடனும் மராத்திய மக்களும் தமிழர்களும் ஒற்றுமையுடன் அங்கு வாழ்வது

91/1

மகிழ்வளிக்கின்றது. தாங்கள் வாழும் மண்ணைப் பிறந்த மண்ணைவிட அதிகம் நேசிக்கும் தமிழர்கள், தாராவி என்ற பகுதியிலும் மும்பை முழுவதும் சேர்த்து சுமார் 20 லட்சத்திற்கும் மேல் வாழ்கின்றார்கள்!

உழைப்பிற்கு உரிய இடம் மும்பையில் உண்டு: ஆனாலும் மும்பையிலும் நம் நெஞ்சை உறுத்தும் முரண்பாடு! அடுக்கு மாடிக்குடி இருப்புகளைத் தன்னகத்தே கொண்டிருக்கின்ற மும்பையில் தகர அழுக்கு வீடுகள், கழிப்பறை, அடிப்படை வசதி இல்லாத குடிசைகள். சாலை ஓரத்தின் நடைபாதைகளில் பழைய துணியைக் குடையாய்ப் போர்த்திக்கொண்டு வாழும் மக்கள்! இந்த முரண்பாடுகளும் விடைகாண முடியாத வினாவாக நம் நெஞ்சில் நெருஞ்சிமுள்ளாகக் குத்திக் கொண்டிருக்கின்றன! இந்த வேறுபாடுகளைக் களைந்து சாமானியமக்களின் வாழ்க்கைத்தரம் உயருகின்ற பொழுது உலகத்தர நகரங்களின் வரிசையில் சிறந்த நகரமாக மும்பை மிளிரும். அருள்நெறித்தந்தை அமைத்த இந்து இளைஞர்மன்றப் பொறுப்பில் பணியாற்றியவரும் தற்போது மும்பை அஞ்சலக உயர்அலுவலராகப் பணிசெய்து வருபவருமான எஸ்.பி. ராமமூர்த்தி, மராத்தி மாணவர்களுக்குத் தமிழ் போதிக்கும் ஆசிரியராய்ச் சேவை ஆற்றி வருகின்றார். தமிழ் உணர்வும், பகுத்தறிவுச் சிந்தனையும், அன்பு உணர்வும் உடைய சீர்வரிசை சண்முகராசா, பரந்து விரிந்த சமூக உணர்வும், மொழிப்பற்றும் உடைய புதிய “தமிழ் லெமூரியா” ஆசிரியர் குமணராசா, புதுமைப்பெண் சிந்தனையைச் செயலாக்கி வரும் எழுத்தாளர் நங்கை குமணன் தளராது தமிழ்த் தொண்டு ஆற்றிவரும் பம்பாய்த் தமிழ்ச்சங்கத் தலைவர் என். ஜெயராமன் தமிழ் உணர்வோடு, சமூகப் பணியாற்றும் தமிழ்ச் சங்கத் துணைத்தலைவர் மலர் அரசன் இளைஞராகச் செயலாற்றும் சங்கச் செயலாளர் வெ. பாலு ஆகியோர் காட்டிய அன்பும், நட்பும் பாராட்டுக்குரியது. பரபரப்பு மிக்க வணிக வாழ்க்கை நிறைந்த மும்பை மாநகரில் தாமிரபரணித் தமிழ் ஒலிக்க தமிழ்த்தவம் மேற்கொண்டிருக்கின்ற மும்பை வாழ் தமிழ் நெஞ்சங்களுக்கு நெஞ்சார்ந்த நன்றி! தொடரும் தமிழ்ப் பயணம்!

என்றும் வேண்டும் இன்ப அன்பு

பொன்னம்பல அடிகளார்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

திருக்குறள் உரை

(தவத்திரு குன்றக்குடி அடிகளார்)

86. இகல்

அறியாமையைத் தொடர்ந்து வரும் தீமை, இகல் என்பது. இகல் என்பது இருவர் தம்முள் பொருது, வலிமையை இழத்தலுக்கு ஏதுவாக இருப்பது.

இகல்என்ப எல்லா உயிர்க்கும் பகல்என்னும்
பண்பின்மை பாரிக்கும் நோய். (851)

எல்லா உயிர்க்கும் பிற உயிர்களோடு கூடி வாழாமல் பகைப்படுத்தும் குற்றம் இகல் என்பர்.

இரவொடு பிரிந்து நிற்கும் பகல் போல, எல்லா உயிர்களிடத்திலிருந்தும் பிரிந்து நிற்கும் நோய் என்பது இகல்.

இகல் தொடர்ந்து துன்பந்தந்து வலிமையையும் பொருளையும் அழிப்பதால் நோய் என்றார்.

பகல்கருதிப் பற்றா செயினும் இகல்கருதி
இன்னாசெய் யாமை தலை. (852)

தம்மோடு கூடாமை கருதி ஒருவன் வெறுப்பனவே செய்தான் எனினும் அவனோடு மாறுபட வேண்டியிருக்குமே என்று எண்ணி அவனுக்கு இன்னாதன செய்யாமல் இருப்பது உயர்வு.

நம்மை வெறுப்பவனுக்கு நாம் தீமை செய்தால் பகைமை வளரும்; தாழ்ச்சி வரினும் இகல் கொள்ளற்க; இகல் செய்யற்க.

இகல்என்னும் எவ்வநோய் நீக்கின் தவல்இல்லாத்
தாவில் விளக்கம் தரும். (853)

மாறுபாடு என்று சொல்லப்படும் துன்பந்தரும் நோயை நீக்கி வாழின் குற்றம் நீங்கிய தாழ்வில்லாத புகழைத் தரும்.

யாரோடும் இகல் இன்மையால் காலம், பொருள் ஆகியன நல்லன செய்வதற்குரிய வாயில்களாக அமையும் என்பதறிக.

இன்பத்துள் இன்பம் பயக்கும் இகல்என்னும்
துன்பத்துள் துன்பம் கெடின். (854)

துன்பத்துள் துன்பமாகிய மாறுபாட்டை நீக்கி விடின் இன்பத்துள் இன்பம் கிடைக்கும். மாறுபாடு எனும் துன்பத்துள் துன்பத்தை நீக்குதலே இன்பத்துள் இன்பத்தைத் தரும்.

மாறுபாடுகளை, தொடர்நிலை அழிவுக் காரியங்களில் ஈடுபடுத்துவதால் இன்பங்கெடும்.

மாறுபாடுகளைத் தள்ளி வைப்பது இன்பம் பயக்கும் முயற்சிகளில் ஈடுபடுத்துதலால் "இன்பத்துள் இன்பம் கிடைக்கும்" என்றார்.

இகல்எதிர் சாய்ந்துஒழுக வல்லாரை யாரே
மிகல்ஊக்கும் தன்மை யவர். (855)

ஒருவரோடு மாறுபாடு கண்ட வழி, மாறுபாடுகளை ஏற்றுக் கொள்ளாமல் மூர்க்கத்தனமான பிடிவாதம் செய்யாமல் ஒருவழியாக ஒதுங்கி ஒழுகவல்லாரை வெல்லக் கருதும் தன்மை உடையவர் யார்?

தம்மொடு மாறுபடுவார் மாறுபாட்டை ஏற்காமல் மாறுபாட்டை ஒதுக்கி வைத்து ஒழுகுந்திறன் கொண்டோரை வெல்லுவார் யார்? மாறுபாடுகளை ஒதுக்கி வாழ்வோரை யாவரும் நேசிப்பர்; வெல்ல நினையார்.

இகலின் மிகல்இனிது என்பவன் வாழ்க்கை
தவலும் கெடலும் தணித்து. (856)

பிறரோடு மாறுபாடு கொள்ளுதலே இன்பம் என்று மாறுபட்டுச் சண்டை செய்வானின் வாழ்க்கை தவறுதலும், "செல்வம்" கெடுதலும் சிறு பொழுதிலேயே அமையும்.

மாறுபாட்டின் காரணமாக ஆத்திரப்படுதலால் தாமே இதயப் பாதிப்பால் மரணமெய்தியும் மாறுபாடு முற்றிய வழி நடைபெறும் சண்டையில் கொல்லப்பட்டும் உயிர் வாழ்க்கை தவறும்.

செல்வம் என்பது நாள்தோறும் உழைத்துச் சம்பாதித்துச் சேர்ப்பது. மாறுபாட்டில் ஈடுபடுவோர்க்கு உழைத்துச் சம்பாதிக்கக் காலம் ஏது? அதனால் செல்வம் கெடும். மேலும் மாறுபாட்டைத் தீர்த்துக் கொள்ளும் வழியில் செலவு உண்டாதலாலும் செல்வம் கெடும் என்றார்.

மிகல்மேவல் மெய்ப்பொருள் காணார் இகல்மேவல்
இன்னா அறிவி னவர். (857)

மாறுபாட்டினை மேற்கொண்டு செல்லும் துன்பியல் அறிவுடையோர், வெற்றி மேவுதலுக்குரிய மெய்ப்பொருளைக் காணாதவர்.

மிகல் மேவும் மெய்ப்பொருளுக்கு மெய்ப்பொருள் நாயனார் வரலாறு அறிக.

இகலிற்கு எதிர்சாய்தல் ஆக்கம் அதனை
மிகல்ஊக்கின் ஊக்குமாம் கேடு. (858)

ஒருவன் மாறுபாடு கொண்டு எதிர்த்து வந்தவிடத்துத் தான் எதிராது சாய்ந்து ஒழுகும் இயல்பு ஆக்கம் தரும். அப்படிச் சாய்ந்து போகாது எதிர்த்து நிற்பாராயின் கேடு மிகும்.

கோழைத்தனம் ஆகாதோ எனின், மாறுபாட்டின் வழியாதலின் கோழைத்தனம் ஆகாது.

இகல்காணான் ஆக்கம் வருங்கால் அதனை
மிகல்காணும் கேடு தரற்கு. (859)

ஒருவன் செல்வம் வரும்பொழுது ஒருவருடன் மாறுபாடு கொள்ளக் கருதான். தனது செல்வத்துக்குக் கேடு வருங்காலத்திலேயே யாவருடனும் மாறுபடுதலை ஏற்பான்.

செல்வம் சேர்க்கும் முயற்சியில் ஈடுபடுங்காலத்தில் மாறுபாடுகளை ஏற்கமாட்டான். செல்வத்தை அழித்துக் கொள்ள நினைப்புழி எவருடனும் மாறுபாடுகளை ஏற்பான்.

இகலானாம் இன்னாத எல்லாம் நகலானாம்
நன்னயம் என்னும் செருக்கு (860)

ஒருவனுக்கு மாறுபாடு ஒன்றினாலே பொல்லாதனவெல்லாம் உண்டாம். நட்பொன்றினாலேயே நல்ல செல்வம் என்னும் செருக்கு உண்டாம்.

(தொடரும்)

பிரேக்கும் - நண்பர்களும்

வண்டிக்கு பிரேக் அவசியமாக இருத்தல் போல, மனிதர்களுக்கு அவர்களின் இயல்பான உணர்ச்சிப் போக்குக்குத் தடை போட்டு ஆற்றுப்படுத்தும் நண்பர்கள் தேவை.

– அருள்நெறித்தந்தை

அழகப்பா பல்கலைக்கழக
20வது பட்டமளிப்பு விழா உரை – 28.01.2008

(தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்)

போற்றுதலுக்கும் பாராட்டுதலுக்குமுரிய மேதகு ஆளுநர் பெருந்தகை அவர்களே, பேரன்புக்குரிய அழகப்பா பல்கலைக்கழகத் துணைவேந்தர் உயர்திரு ராமசாமி அவர்களே, அன்பிற்குரிய பதிவாளர் தண்டபாணி அவர்களே, அன்பிற்குரிய உமையாள் ஆச்சி அவர்களே, ஆட்சிக்குழு உறுப்பினர்களே, அன்பிற்குரிய பல்கலைக்கழக பேராசிரியர், பேராசிரியை பெருமக்களே, இன்று பட்டங்கள் பெற்று நாளைய இந்தியாவாய் மலர இருக்கின்ற மாணவச் செல்வங்களே, உங்களைத் தற்சமயம் சந்திப்பதிலும் சந்தித்துச் சில வார்த்தைகள் பகிர்ந்து கொள்வதிலும், பரிமாறிக் கொள்வதிலும் மட்டில்லா மகிழ்ச்சி அடைகின்றோம்.

தேசிய தரமதிப்பீட்டு நிர்ணயக்குழு "A" நட்சத்திரத் தகுதி வழங்கிய இந்தியாவின் 15 பல்கலைக்கழகங்களில் தனிச்சிறப்புக்குரிய பெருமை உடையது அழகப்பா பல்கலைக்கழகம் என்பதில் மட்டில்லா மகிழ்ச்சி அடைகின்றோம்.

கிராமப்புறத்து பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட அடித்தட்டு மக்களின் கல்வி வளர்ச்சிக்குப் பாடுபடும் சிறப்புக்குரியது அழகப்பா பல்கலைக்கழகம்.

"கோடி கொடுத்த கொடைஞன்! குடியிருந்த
வீடும் கொடுத்த - விழுத் தெய்வம்" வள்ளல் அழகப்பர் என்ற மகத்தான மாமனிதரின் அறக்கொடையில் உருவாகியதுதான் அழகப்பா பல்கலைக்கழகம்.

பாம்பாடும் இடம் எல்லாம் பந்தாடும் இடமாக மாற்றிக் காட்டியவர் வள்ளல் அழகப்பர்.

"கல்வி இல்லாப் பெண் களர்நிலம்!
அங்குப் புல்விளையலாம்! நல்ல
புதல்வர்கள் விளைவதில்லை" என்று பாவேந்தன் பாரததாசன்

குறிப்பிட்டார். களர்நிலமாய் இருந்த காரை மண்ணைக் கல்வி மாநகரமாய் மாற்றியவர் வள்ளல் அழகப்பர்! காரைக்குடி மத்திய மின்வேதியியல் ஆராய்ச்சிக் கூடம் வருவதற்கு 300 ஏக்கர் நிலத்திற்குரிய ஆவணத்தையும் ரொக்கப் பணமாக 15 லட்சம் ரூபாயையும் நேரு பெருமகனாரிடம் வழங்கி ஆனந்த அதிர்ச்சியை ஏற்படுத்தினார் அழகப்பர். நேரு பெருமகனார் தம் மனம் எல்லாம் பூரிக்க வள்ளல் அழகப்பரை "சமதர்ம முதலாளி" என்று அழைத்தார்.

தொடக்கப்பள்ளி முதல் பல்கலைக்கழகம், பொறியியல் கல்லூரி, தொழில்நுட்பக் கல்லூரி, மத்திய மின்வேதியியல் ஆய்வுக்கூடம் என்று இந்தியாவின் ஒரு சிறிய நகராகிய காரை நகரை கல்வி மாநகரம் ஆக்கிய மகத்தான சாதனை வள்ளல் அழகப்பர் என்ற மகத்தான மனிதருக்கே உண்டு.

வள்ளல் அழகப்பர் தோற்றுவித்த அறிவுக்கோட்டத்தில் கல்விப் பயனால் பட்டம் பெறுகின்ற தாங்கள் சிந்திக்க வேண்டிய சிந்தனைகள் ஏராளம், ஏராளம்! அவற்றில் சிலவற்றைச் சிந்தனை செய்வோம்.

"கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே"

என்றார் நம் தமிழ்ச் சான்றோர். சான்றோர்கள் கல்வியின் அவசியத்தை வலியுறுத்தியும் கல்வி வெளிச்சம் பரவலாகப் பலரையும் சென்றடையவில்லை. கல்வி வாய்ப்பு எல்லோருக்கும் பரவலாக அளிக்கப்படாத சமுதாயத் தளத்தில் நின்றுதான் பாரதி உரக்கக் கூவினான்.

"அன்னசத்திரம் ஆயிரம் கட்டல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
அன்னயாவினும் புண்ணியம்கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்"

கோவிலைக் கட்டு! கும்பாபிஷேகம் நடத்து! பாவத்திற்குப் பரிகாரமாய் 'புண்ணியம் தேடு" என்ற சமுதாயத் தளத்தின் மீது ஏறி நின்று ஏழைக்கு எழுத்தறிவித்தல் கோடி புண்ணியம் என்று பாரதி கூறினான்! இன்று மக்களாட்சி நடைபெறுகின்ற நாட்டில் கல்வி எல்லோருக்கும் வழங்கப்படுவது அடிப்படை உரிமையாகிவிட்டது. எல்லோரும் பெற்ற

கல்வியால் எல்லோரும் பெறும் சம வாய்ப்புச் சம உரிமைச் சமுதாயம் மலர்ந்திருக்கின்றதா என்பது தான் கேள்விக்குறி.

திருவள்ளுவப் பெருமானிடம் ஒரு இளைஞன் கேட்டான். "அய்யா, அழகிய குளத்திலுள்ள தாமரை மலர் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு அடி உயரத்தில் இருக்கின்றதே. ஒருநாள் 2 அடி உயரத்தில், இன்னொரு நாள் 3 அடி உயரத்தில் மற்றொரு நாள் 4 அடி உயரத்தில் காணப்படுகின்றதே! தண்ணீரில் இருக்கும் தாமரை மலரின் உயரத்தை எப்படி அளப்பது? தாமரை மலரை சரியாக அளக்க எந்த அளவுகோலைப் பயன்படுத்துவது" என்று கேட்டான்.

திருவள்ளுவர் சிரித்துக்கொண்டே சொன்னார். "தாமரை மலருக்கு ஏதப்பா தனி உயரம்? தண்ணீரின் உயரம்தான் மலரின் உயரம்! தண்ணீர் உயர உயர, தாமரை மலர் உயரும்! அதைப்போல மனிதனின் உயரமும் அவனின் எண்ணத்தின் உயரத்தைப் போலத்தான்! எண்ணம் உயர உயர, மனிதன் உயர்வான்! சிந்தனை உயர, உயர மனிதன் சிறந்து விளங்குவான்" என்றார்.

பறக்கும் விமானத்தில் உலகத்தின் முன்னணிக் கோடீஸ்வரருள் ஒருவர் ஆகிய ராக்பெல்லர் பயணம் செய்துகொண்டிருந்தார். விமானத்தில் பயணம் செய்துகொண்டிருக்கும் பொழுதே தமது கணினியை இயக்கிப் பணியாற்றிக் கொண்டிருந்தார்! அவர் அருகே பயணம் செய்த இளைஞன் கேட்டான் "ஐயா, நீங்கள்தான் உலகின் முதல் கோடீஸ்வரர் ஆயிற்றே! தேவையான அளவிற்கு வளர்ந்து விட்டீர்கள். பிறகு ஏன் இந்தப் பறக்கின்ற விமானத்தில் கூடப் பணியாற்றிக் கொண்டிருக்கின்றீர்கள்? என்று கேட்டான். ராக்பெல்லர் அந்த இளைஞனிடம் திரும்பக் கேட்டார். "இந்த விமானம் எத்தனை அடி உயரத்தில் பறக்கின்றது" என்று "சுமார் 50000 அடி உயரத்திற்கு மேல் பறக்கின்றது" என்று அந்த இளைஞன் பதில் கூறினான்! "50000 அடி உயரத்திற்கு மேலே வந்து விட்டேன் என்று விமான ஓட்டி விமானத்தை நிறுத்தினால் என்ன நடக்கும்?" என்று வினவினார் ராக்பெல்லர். "மிகப்பெரிய விபத்து ஏற்பட்டு நாம் அனைவருமே காணாமல் போய்விடுவோம்" என்றான் அந்த இளைஞன். இதுதான் வாழ்க்கை! சிகரத்தில் ஏறி விட்டோம் என்று நாம் அயர்ந்து விட்டால், படுபாதாளத்தில் விழுந்து காணாமல் போவோம்! வாழ்க்கைப் பயணம் இளைப்பாறுதல்,

களைப்பாறுதல் இன்றிப் பயணம் செய்வது! இடையூறு தாண்டிப் பயணம் தொடர்வது! தடைகளைப் படிகளாக்கி பயணம் செய்வது. இன்றைய கல்விமுறை. மனிதத்தை உருவாக்க வேண்டும். தொடக்கப்பள்ளியில் இருந்து உயர்கல்வி வரை மாணவர்களைத் தேர்வுகளுக்கு தயார் செய்வதோடு நின்றுவிடாமல் வாழ்க்கைக்கும், வாழ்க்கைப் போட்டியில் வெற்றி பெறுவதற்கும் மாணவர்களைத் தயார் செய்யவேண்டும்!

குடந்தையில் பள்ளி ஒன்றில் மேற்கூரை எரிந்தபொழுது, பள்ளிக் கூரைக்குக் கீழே எரிந்தன இளம்பிஞ்சு மழலை மலர்கள். ஆனால் கருகிப் போன மொட்டுகளுக்கு நடுவே ஒரு தங்க மழலை மலர்! அதன் பெயர் தாரணிகா! எரிந்த பள்ளிக் கூரைக்கு உள்ளே நெருப்பு வளையத்துக்குள் புகுந்து தாரணிகா என்ற அந்தக் குழந்தையின் சித்தப்பா காப்பாற்றுகின்றார். குழந்தை தாரணிகா தன் சித்தப்பாவிடம் சொல்கின்றது. "என்னைப் பற்றிக் கவலைப்படாதீர்கள் சித்தப்பா! என் சக தோழிகள் நெருப்புக்குள் வெந்து கொண்டிருக்கின்றனர். முதலில் அவர்களைக் காப்பாற்றுங்கள் சித்தப்பா!" என்று கூறி சித்தப்பாவின் மடியில் உயிர் விட்டாள் தாரணிகா!

குடந்தைப் பள்ளியில் நெருப்பு வைத்த தேர்வில் ஆசிரியர்கள் கூட ஓடிப்போய்த் தோற்றார்கள்! மாணவிகள் மரணத்தினைப் பரிசாகத் தந்து மனிதத்தின் உச்சத்திற்குப் போனார்கள்! எல்லாத் தாயின் கருப்பையும் சுமப்பது விலங்கைத்தான்! அதை மனிதனாக மாற்றுகின்ற வேலையைத்தான் கல்வி செய்து தரவேண்டும்.

அதனால்தான் இன்று தொடக்கக் கல்வியில் "சமச்சீர் கல்வி" என்பது பரவலாகப் பேசப்படுகின்றது.

எது சமச்சீர் கல்வி?

தொடக்கக் கல்வி உலகத்தில் சமச்சீர் கல்வி என்பது, அவர் அவர்க்குத் தேவையான கல்வியை அவரவர் வாழும் பகுதியில் அளிப்பது ஆகும்!

கற்பிக்கப் போதுமான ஆசிரியர்கள், கற்றலுக்குத் தேவையான கருவி, கரணங்கள், உள்கட்டமைப்பு வசதிகள். பள்ளிக்கும் பொதுமக்களுக்கும் நெருங்கிய உறவு, மாணவர் சேர்க்கையில் நிபந்தனையின்மை, இடைநிற்றல் இல்லாது தொடர் கற்றல், மாணவன்

தாய்மொழியை இலக்கணப் பிழையின்றி எழுத, பேசக் கற்பித்தல், இசை, நாட்டியம், நாடகம், ஓவியம் எனப் பல்கலைப் பயிற்சி, ஒழுக்கம், பண்பாடு, அமைதிக்கல்வி போதித்தல் என முழுமையான தரமான கல்வி, தன்னார்வத்துடன் கற்கும் வகையில் போதிக்கப்படுகின்றது. இதைப் போலவே உயர் கல்வி உலகத்தில் தேசிய அறிவாணைக்குழுவின் (Knowledge commission) பரிந்துரைகள், குறைகளைக் களைந்து நிறைகளை நோக்கி வழிநடத்துகின்றது. தரம், தகுதி, செம்மையான நிர்வாகத்தின் அடிப்படையில் தன்னாட்சியை கல்லூரிகளுக்கு வழங்குவது. சமுதாயக் கல்லூரிகளில் தொழில்கல்வியோடு முறைசார்ந்த கல்வியும் இணைந்து போதிப்பது, தேவைக்கு ஏற்ப பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவது இதன் சிறப்பியல்புகள் ஆகும். குறிப்பாகக் கல்வித் தரத்தை மேம்படுத்த, பாடங்கள் மற்றும் ஆசிரியர்களை மாணவர்கள் மதிப்பிடுதலும், சக ஆசிரியர்கள் மதிப்பிடுதலும் ஊக்கப்படுத்தப்பட வேண்டும். இவை ஒரு நல்ல திருப்புமுனை ஆகும்.

தொடக்கக் கல்வி நிலையில் இருந்து உயர்கல்வி உலகம் வரை கல்வி உலகத்தில் மறுமலர்ச்சிப் பாதை தெளிவாகத் தெரிகின்றது!

"கனவு காணுங்கள்! என் தேசத்து இளைஞர்களே! கனவு காணுங்கள்!" என்று இளைய தலைமுறையைத் தட்டி எழுப்பிய முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல்கலாமை கேட்டார்கள்! "உலக அரங்கில் இந்திய விண்வெளித் தளத்தின் சாதனைகளைக் கண்டு பெருமைப்படுகிறார்கள்" என்று அதற்கு அப்துல்கலாம் குறிப்பிட்டார். "இந்த நாட்டில் நடக்கவே முடியாத கோடிக்கணக்கான ஊனம் உள்ள ஏழைக் குழந்தைகள் நடப்பதற்கு உதவும் ஊன்றுகோல் என் ஆய்வகத்தில் கண்டறியப்பட்டதற்கு கடவுளுக்குக் கோடி நன்றிகள் சொல்வேன்" என்றார். குடியரசுத் தலைவர் பொறுப்பில் பணி நிறைவு பெற்றபின் மீண்டும் ஆசிரியப் பணி ஆற்றிவரும் ஆன்றவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர் அவர்.

அன்பிற்குரிய பட்டம் பெற்றுள்ள அருமைச் சகோதரர்களே! சகோதரிகளே! பல்கலைக்கழகம் தந்த பட்டங்கள் அறிவுலகத்தின் மதிப்பீடு! அதை நாம்தான் வாழ்க்கையில் மதிப்பீடாக மாற்ற வேண்டும்!

மனிதகுலத்தின் சிக்கலைத் தீர்ப்பதற்கும், மனித குலத்தின் வளர்ச்சிக்கும் நூலிழை அளவேனும் நாம் பெற்ற கல்வி பயன்பட்டால் அதுவே நாம் பெற்ற கல்வியின் பெரும் பயன் ஆகும்! அதைத்தான் "அறிவு அற்றம் காக்கும் கருவி" என்றார் திருவள்ளுவர் பெருமான்! தேடிச் சோறும் நிதம் தின்று பல சின்னஞ்சிறு கதைகள் பேசிப்பின் மாயும் வேடிக்கை மனிதரைப் போல் நான் வீழ்வேன் என்று நினைத்தாயோ!" என்று பாரதி பாடியதைப் போல வாழும் மனிதராய் வாழ்ந்து காட்டுவோம்...

அதோ! அதோ! வள்ளல் அழகப்பர் ஏற்றி வைத்த கல்வி வெளிச்சம் வையகத்தையும், வானகத்தையும் இணைக்கின்றது!

பல்கலைக்கழகம் தந்த வெளிச்ச விளக்கை கையில் ஏந்தி உலகம் வாழவாழும் வாழ்க்கையை நோக்கிப் பயணம் செய்வோம்!

வாழ்க! வையகம்!

வெல்க மானுடம்!

மழைநீரும் - மனித உணர்ச்சியும்

மழைபெய்து புரண்டுவரும் தண்ணீரைக் கால்வாய்களின் வழிக்கொணர்ந்து ஏரிகளில் தேக்கிக் கழனிகளுக்குப் பாய்ச்சும் போதுதான் உரிய பயன் ஏற்படுகிறது. அதுபோல, மனிதனிடம் தோன்றும் இயல்பான உணர்ச்சிகளை அறிவுக் கால்வாய்கள் வழிச்செலுத்தி அனுபவம் என்ற ஏரியில் தேக்கிச் செயல்முறை என்ற கழனியில் செலுத்தினால்தான் உரிய பயன் விளையும். சிந்திக்காத மனிதனின் உணர்ச்சிகள் பொட்டல் காட்டில் பெய்த மழையைப் போலப் பயன்படாமல் போய்விடும்.

கற்ற கல்வியும் - பெற்ற பொருளும்

கற்ற கல்வியை மறந்துவிடுவது என்பது சம்பாதித்த பணத்தைத் தெருவிலே போட்டுவிட்டு வருவது போன்றது. கற்ற கல்வியை மறந்துவிட்டால் அது உற்ற நேரத்தில் கைகொடுத்து உதவாது.

– அருள்நெறித்தந்தை

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

அருட்திரு பாம்பன் சுவாமிகள் அருளிய திருக்குன்றக்குடிப்பதிகம் உரை

(சைவத்தமிழ்மணி.வித்துவான். க. கதிரேசன்)
(குன்றக்குடி ஆதீனப் புலவர்)

பாட்டின் உனைப்புகழ்ந் தேமண் பாட்டை ஒழித்துள்ள அன்பர்
நாட்டில்இ ருக்கினும் காட்டை நண்ணிஇ ருக்கினும், அன்றே
கேட்டதெல் லாம்அளித்(து) என்றும் கேடில்அ ரும்பொருள் தன்னைக்
கூட்டிக்கொ டுத்திடும் கோவே குன்றக் குடியுறை தேவே.

கூட்டுமுறை

பாட்டின்.... கேட்டதெல்லாம் அன்றே அளித்து,

என்றும்.... தேவே; இவ்வகையில் எனக்கும் அருள்க என்று வருவித்துக் கூட்டுக.

குறிப்புரை

மண்பாடு = இவ்வுலகத் துன்பங்கள். நண்ணி = அடைந்து. அன்றே = அப்பொழுதே. என்றும் = எக்காலத்தும். கேடுஇல் = தன்மேல் நிலையில் சற்றும் கெடாத. அரும்பொருள் = வீடுபேறு.

பொழிப்புரை

பாட்டின் மூலம் உன்னைப் புகழ்ந்து போற்றி, அதனால் இவ்வுலகத்து துன்பங்களை ஒழித்துவாழும் உன் அடியார் பலரோடு நாட்டில் இருந்தாலும், தனித்துக் காட்டில் இருந்தாலும், அவர்கள் கேட்டவற்றை எல்லாம் அப்பொழுதே அருளி, எக்காலத்தும் தன்மேல் நிலையில் சற்றும் கெடாத பிறர்க்குக் கிடைத்தற்கரிய வீடுபேற்றையும் ஒருசேர அருளும் கோவே, குன்றக்குடியுறை தேவே, எனக்கும் இவ்வகையில் அருள்க.

விளக்கம்

வழிபாட்டில் பாட்டே சிறப்புடையது. "அருச்சனை பாட்டே ஆகும் ஆதலால் மண்மேல் நம்மைச் சொற்றமிழ் பாடுக என்றார் தூமறை பாடும்வாயார்" என்று சிவமே அருளியதாகச் சேக்கிழார் கூறுகிறார்.

பாட்டின் இசை; பாடுகின்றவர் பாட்டுடைத் தலைவன் கேட்போர் ஆகிய முத்திறத்தாரையும் தன்னுடன் பொருந்த - இசைய - செய்வதாதலின் இசை எனப்பெற்றது. இசை உயிர்க்குலம் அனைத்தையும் தன்பால் ஈர்த்து மெய்ம்மறக்கச் செய்வது. குறிஞ்சி நிலத்துக் கொடிச்சியின் பாடல், தினைதின்ன வந்த யானையை மெய்ம்மறக்கச் செய்து உறங்கவைத்ததை அகம் 102ஆம் பாடல் உணர்த்தும். ஆனாயநாயனாரின் குழல் இசை மாண்பினைச் சேக்கிழார் ஏழு பாடல்களில் உணர்த்துவதும், தாலாட்டில் குழந்தைகள் மெய்ம்மறந்து உறங்குவதும் கண்கூடு. ஆதலின் "பாட்டின் உனைப்புகழ்ந்தே மண்பாட்டை ஒழித்துள்ள அன்பர்" என்றார் அடிகள்.

மண் என்பது ஆழமான பொருள் பொதிந்த சொல். மண் = அணு, கழுவு என்ற இருபொருளும் தருவது.

"மண்திணிந்த நிலனும் - புறம். 2:1

என்பதற்கு "அணுச் செறிந்த உலகம்" என்பது பழையவுரை. இவ்வுரையின் தன்மை "அணுக்களால் ஆக்கப்பெற்றனவே இவ்வுலகும் இவ்வுலகியற் பொருள்களும்" என்ற அறிவியல் நோக்கில் அமைந்தது.

மண்பாட்டை - மண் - கருவியாகுபெயராய் உகைம் குறித்தது.

புறத்துறைகளுள் ஒன்று "மண்ணுமங்கலம்" என்பது. அரசன் நீராடி - தன்னைக்கழுவி - மங்கலப்படுத்திக் கொள்வது குறித்த துறை இது. எனவே மண் = கழுவு. இவ்வுலகம் உயிர்க்குலத்தின் மும்மல மாசுகளைக் கழுவிக்கொள்ள வாய்த்தது என்பது மெய்ப்பொருளியல் உண்மை. இவ்விடத்தில் மண் என்பது தொழிலாகுபெயராய் இவ்வுலகம் குறிக்கிறது.

இங்ஙனம் இருவேறு நுண்கருத்துகளையும் உள்ளடக்கியதாய் "மண்" என்ற சொல்லாட்சி இங்கு அமைந்துள்ளது.

எப்போதும் இனியானை - பரம்பொருளை - நீ எங்கிருந்தும் நினைக்கலாம் என்பார். "நாட்டில் இருக்கினும் காட்டை நண்ணியிருக்கினும்" என்றார். சுந்தரர்,

எங்கேனும் இருந்து உன்அடிகள் உனைநினைந்தால்
அங்கேவந்(து) என்னோ(டு) உடனாகி நின்றருளி
இங்கேஎன் வினையை அறுத்திட்(டு) எனைஆளும்
கங்கா நாயகனே கழிப்பாலை மேயானே?

- திருமு.7. கழிப்பாலை.2

என்பதும் எண்ணத்தக்கது.

"எந்நிலையில் நின்றாலும் எக்கோலம் கொண்டாலும்
மன்னிய சீர்ச் சங்கரன்தாள் மறவாமை பொருள்"

– திருமுறை.12. சாக்கியநாயனார் : 6

என்பது சேக்கிழார் வாக்கு.

பொருளல்லவரைப் பொருளாகச் செய்யும் பொருள்கள் அனைத்தும் நிலையில்லாதன; ஒருகாலத்தில் கெடுவன. எக்காலத்தும் கெடாத பொருள் வீடுபேற்றின்பம் என்பதால் அது "கேடில்" என்றும், அது கிடைத்தற்கு அரியவற்றுள் எல்லாம் அரியது ஆதலின் அருமை – அரு – என்றும் ஈரசைகள் பெற்றுக் "கேடில் அரும்பொருள்" எனப்பெற்றது.

தன் அடியவர் கேட்ட இம்மை இன்பத்தை மட்டுமன்றி, வீட்டின்பத்தையும் கூட்டி வழங்குகின்ற வள்ளல் குன்றக்குடி அருள்தரு சண்முகநாதப்பெருமான் என்பதால் "அரும்பொருள் தன்னைக் கூட்டிக் கொடுத்திடும் கோ" எனப் பெறுகின்.

இலக்கணக்குறிப்பு

மண் = அணுக்களால் ஆன உலகினைக் குறிப்பின் கருவியாகுபெயர். மண் = மலம் கழுவ வாய்த்த உலகு என்று குறிப்பின் தொழிலாகுபெயர். இருக்கினும், இருக்கினும் = எண்ணும்மைகள். எல்லாம் = எல்லாமும் என்பதன் கடை குறைந்து வந்தது.

(தொடரும்)

தராசும் மனிதனும்

ஒன்றை நிறுத்திக் காட்டுகின்ற தராசின் முள் மட்டும் தனித்துக் கிடக்குமானால் அதற்குக் கடமையுமில்லை, சிறப்புமில்லை. அதே முள் தராசில் இணைக்கப்பெறுமானால் கடமையுண்டு – சிறப்பும் உண்டு. அப்பொழுது அம்முள் குறையையும், நிறையையும் காட்ட வேண்டும். அதுபோல, மனிதர்கள் பொறுப்புள்ள பதவிகளைப் பெறுவார்களானால், அப்பதவிகளுக்கு ஏற்பக் கடமைகளுண்டு. குறை நிறை காட்டும் கடமை புரியாத தராசு – ஓட்டைத் தராசு, கடமையைச் செய்யாமல் பதவியில் வீற்றிருப்பவர்கள் உபயோகமற்றவர்கள்; உதவாக்கரைகள்.

– அருள்நெறித்தந்தை

அருளாலய கூத்து

(தமிழாகரர். **தெ. முருகசாமி**, புதுச்சேரி)

தில்லைப் பதியின் திருச்சிற் றம்பல
ஒல்லை மேடையில் ஒருபொழு தேனும்
இல்லை திருமுறை பாடவாய்ப் பென்று
தொல்லைப் படுத்திய தொடர்துன் பென்னும்
கடிவா ளத்தின் இறுக்கந் தளர்ந்ததால்
அடிக்கரும் பினிப்பாய் அம்பலம் மணக்குது!
ஒருகா லத்தில் ஒண்டமிழ்ப் புலவர்
திருச்சிற் றம்பல மேடைகீ ழிருந்து
பாடிய திருமுறைப் போக்கை மாற்ற
ஆடிய பாத பூசக ரிடத்தில்
வேண்டுதல் வைக்க; தீட்சதப் பூசகர்
ஆண்டம் முறையினில் மாற்றங் காண
ஒப்பிய வண்ணம் ஒவ்வொரு காலம்
செப்பிடும் பூசை வேளை தோறும்
திருமுறை தன்னை மேடையில் பாடினர்!
வருமுறை யாக வந்தஇவ் வழக்கைக்
காண கேட்க மாட்சிமை யாயினும்
மாணா ஒருசெயல் மறைந்துள தென்பதை
உற்று நோக்குவர் உணர்வர்! அதுதான்
உற்ற திருமுறை தம்மைத் தீட்சிதர்
காதலால் ஓதுதல் சிறப்பே யாயினும்
ஓதுவார் தாமும் தோதாய்த் திருமுறை
பாடும் பணியின் பயனை இழந்தனர்!
ஆடும் அம்பலக் கூத்தன் அருகுள
திருச்சிற் றம்பல மேடை தன்னில்
அருச்சனை முடிந்ததும் தீட்சதர் தம்முடன்
தீந்தமிழ் ஓதுவார் திருமுறை பாடினால்
ஏந்துவர் அவர்களும் எல்லாப் பயனும்!
தமிழொடு தமிழரை மேடை ஏற்றிய
அமிழ்துறு பயனும் தீட்சதர்க் காகும்!
இதனால் இன்னும் பொன்னம் பலத்தான்

இதயம் கனிந்து இதமாய் ஆகுவான்!
பொன்னம் பலமும் பராந்தகன் போன்றோர்
பொன்வேய்ந் திட்டப் பொலிவைப் போலப்
பொற்றமி ழாலே பொன்னம் பலந்தான்
கொற்றம் கண்டது தீட்சத ராலெனும்
சரித்திரம் சொல்ல வேண்டும் என்பேன்!
உரித்தாய் இதற்கும் ஒன்று சொல்வேன்!
தில்லை என்பது திருமுறை பிறந்த
தொல்லைப் பழம்பதி! தொன்று தொட்டுத்
தமிழால் தில்லை தெரிந்தள விற்குத்
தமிழலா வடமொழி போன்ற மொழிகளால்
அறியப் பட்டது அளவில் குறைவே!
செறிவாய் இதனைச் செகமே அறியும்!
ஆதலால் சொல்வேன், சிற்றம் பலத்தில்
ஓதுவார் தானே ஓதுதல் சாலும்!
தீட்சதர் தாமும் தீர்க்கமாய் உணர்ந்து
மாட்சிமை யோடு முடிவெடுத் திட்டால்
தாங்கள் வழக்கமாய் ஓதும் மறையுடன்
பாங்காய்ப் பாடும் திருமுறை தம்மையும்
ஓதுவா ரோடே ஒத்துப் பாட
மாதொரு பாகன் மனமும் மகிழ்வான்!
தூமறை பாடும் வாயர் தெய்வத்
தூய்தமிழ் வாயராய் மாறினர் என்றே
தாரணி தானும் தரமாய்ப் புகழும்!
சீரணி யான இச்செயற் பாடே
ஒத்த தறிதல் ஆகும் என்பது
சித்தம் களிக்கும் திருக்குறள் கருத்து!
அக்குறள் பற்றி அடிக்கடி தானும்
திக்கெலாம் விளக்கிய தீந்தமிழ் குன்றாக்
குடியின் அடிகளாம் தமிழ்மா முனிவர்
குடிகொள் அருளா லயத்தமிழ்க் கூத்தாய்
தில்லைத் தரிசனம் போலத் தினமும்
எல்லையில் மகிழ்வை எல்லோ ருக்கும்
கொடுக்கும் என்பதால் கூடிய மட்டும்
விடுக்குமிங் வேண்டலை வெல்லச்செய் வீரே!

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

பெரியபுராணம் புலப்படுத்தும் வாழ்க்கை நெறி

(புலவர். **ச.மு. விமலானந்தம்)**

4. தூய அன்பு (பக்தி)

பொத்தப்பி நாட்டு உடுப்பூரில் வேடர் தலைவனான நாகன் வாழ்ந்து வந்தான். அவனுக்கு முருகன் அருளால் பிறந்த ஆண் குழந்தைக்குத் "திண்ணன்" எனப் பெயரிட்டு வளர்த்தான். திண்ணன் வளர்ந்து படைக்கலப் பயிற்சி பெற்றான். அவனுக்குப் பதினாறு வயது ஆகியது; அவன் வேடர் தலைவனானான்.

ஒரு நாள் திண்ணனார் வேடர்களுடன் காட்டிலுள்ள கொடிய விலங்குகளை வேட்டையாடச் சென்றார். காடனும், நாணனும் தவிர மற்றவர் பிரிந்துவிட்டனர். மூவரும் காளத்திமலைச் சாரலை அடைந்தனர். நாணன் "மலைமேல் சென்றால் குடுமித்தேவரைப் பார்க்கலாம்" என்றான். திண்ணனார் நாணனுடன் மலைமீது சென்றார். குடுமித்தேவரைத் தழுவினார். உச்சி மோந்தார். முத்தமிட்டார்; நெடுநேரம் பெருமூச்சுவிட்டு நின்றார். அவர் உடல் புளகம் கொண்டது; கண்கள் நீரைப் பொழிந்தன; உள்ளம் உருகியது. "கொடிய காட்டில் நீர் தனியாக இருக்கிறீர்" என்று கூறி காடன் இருந்த இடத்துக்கு வந்தார்; பன்றி இறைச்சியைத் தீயில் வாட்டிச் சுவையான பகுதியைச் சுவைத்துப் பார்த்துத் தேக்கிலையில் வைத்து ஒரு கையில் எடுத்துக் கொண்டார். ஆற்று நீரை வாயில் கொண்டு, பூக்களைத் தலையில் கொண்டு, ஒரு கையில் வில்லையும், அம்பையும் எடுத்துக் கொண்டு மலை மீது சென்றார்.

திண்ணனார் குடுமித்தேவர் மீது வாயில் கொண்ட நீரைத் தம் அன்பை உமிழ்வார் போல உமிழ்ந்து, தலையில் கொணர்ந்த பூவைச் சூட்டி, உண்பதற்கு இறைச்சியைத் தந்தார். அப்போது ஆதவன் மறைந்தான். அவர் இரவு முழுவதும் இறைவர் பக்கத்திலிருந்து காவலை மேற்கொண்டார். மறுநாள் காலை இறைச்சி முதலியவற்றைக் கொண்டுவரச் சென்றார்.

அப்போது குடுமித் தேவருக்குப் பூசை செய்யும் சிவகோசரியார் என்ற அந்தணர் வந்தார்; அங்கு எலும்பு முதலியன இருப்பதைக் கண்டு வருந்தினார். அந்த இடத்தைத் தூய்மை செய்தபிறகு பூசை செய்துவிட்டுச் சென்றார்.

இறைச்சி முதலியவற்றைக் கொண்டு வந்த திண்ணனார் முதல் நாள் செய்தது போலவே செய்தார். இரவு முழுவதும் காவல் இருந்தார். இவ்வாறு ஐந்து நாள்கள் செய்தார். சிவகோசரியார் நாள்தோறும் வருந்தி இறைவனிடம் முறையிட்டார்.

ஐந்தாம் நாள் இரவில் சிவபெருமான் சிவகோசரியார் கனவில் தோன்றி, "அன்பனே! என் கோவிலை அசுத்தம் செய்ததாக நீ கருதுபவன் சாதாரண வேடனல்லன்; அவன் வடிவம் எம்மிடம் வைத்த அன்பின் வடிவம்; அவனது அறிவு எம்மை அறியும் அறிவு; அவனுடைய செயல்கள் யாவும் எமக்கு இனியவை; அவனது அன்பின் திறத்தினை நாளை நீ அங்கு வந்து மறைவாயிருந்து அறிக" என்றருளி மறைந்தார்.

ஆறாம் நாள் திண்ணனார் வழக்கம் போல் இறைச்சி முதலியவற்றைக் கொண்டு வந்தார். திண்ணனாரின் ஆழ்ந்த அன்பைப் புலப்படுத்த இறைவர் தம் வலக்கண்ணில் குருதி வடியுமாறு செய்தார். அதைக் கண்ட திண்ணனார் வருந்தித் தம் கண்ணைத் தோண்டி இறைவர்க்குப் பொருத்தினார். உடனே குருதி நின்றது. சற்று நேரத்தில் இறைவனின் இடக்கண்ணிலும் குருதி வழிந்தது. அதைக் கண்ட திண்ணனார் தம் மற்றொரு கண்ணைத் தோண்ட முற்பட்டார். அப்போது இறைவர் தம் கையினால் திண்ணனார் கைகளைப் பற்றி, "நில்லு கண்ணப்ப" என்று மூன்று முறை கூறியருளினார். இறைவர் "கண்ணப்ப" என்று அழைத்ததால் "கண்ணப்பர்" என்ற பெயரைப் பெற்றார்.

கண்ணப்பர் அறிவு மிகுந்தவர் இல்லை; செல்வத்திலும் சிறந்தவரில்லை. அவரிடம் இருந்தது தூய அன்பே! (பக்தியே) தூய பக்தியால் ஆறே நாள்களில் ஆண்டவன் அருளைப் பெற்று, வீடுபேற்றை அடைந்தார். எனவே இறையருளைப் பெறத் தூய அன்பே (பக்தியே) போதுமானது. நாம் கண்ணப்பரைப் போல் பற்றற்ற தூய அன்பினால் (பக்தியால்) இறையருளைப் பெற முயல்வோமாக.

(தொடரும்)

திருவாவடுதுறை ஆதீனம் குருமகாசந்நிதானம் அவர்கள் வழங்கிய
"சிவநெறித்தொண்டர்" பட்டம் பெற்ற கயிலைத்திருமணி
சிவத்திரு. ப. மூக்கப்பிள்ளை அவர்களின்

சீர்போற்றும் வாழ்த்து

(பெரும்புலவர். ப. அரங்கசாமி)

1. பண்பார் முதுசைவர் ப.மூக்கப் பிள்ளைதாம்
கண்பார் அருள்காட்டும் கண்ணியரே - ஒண்பாக்கள்
பாடிப் புலவர்கள் பாராட்டும் அண்ணலரின்
ஈடில் கொடைவளம் ஏத்து.

2. துறைசைப்பேர் ஆதீனம் தொல்மரபின் நல்கும்
சிறப்பிலகும் பட்டங்கொள் செம்மல் - மறைமொழியாய்
நாவுரைக்கும் சொல்லினியர் நம்மூக்கப் பிள்ளையைப்
பாவுரைத்துப் போற்றுவோ மே..

தரவு கொச்சகக் கலிப்பா

"சிவநெறித் திருத்தொண்டர்" சீர்பட்டம் பெற்றவர்
சிவநெறித் திருத்தொண்டர் சீர்பட்டம் பெற்றவர்தாம்
தவநெறி அந்தணராய்த் தமிழ்ச்சங்கத் தலைமகனார்
உவமையிலாக் குணத்தவராம் உயர்மூக்கப் பிள்ளைகாண்

வஞ்சி விருத்தம்

வாழி அவர்தம் குலமரபு
வாழி அவர்தம் தொழில்வளமை
வாழி அவர்தம் கால்வழிகள்
வாழி அவர்தாம் பல்லாண்டே

காரைக்காலம்மையும் பரமதத்தனும்

முனைவர். க.ப. அறவாணன்
(மேனாள் துணைவேந்தர், மனோன்மணியம் பல்கலைக்கழகம்)

(மக்கள் சிந்தனை (பங்குனி 2039; மார்ச்சு 2008) இதழில் சிறந்த பாவலரும், புலவருமாகிய ஆ. பழனி அவர்கள் எழுதிய "கண்ணகியும் காரைக்கால் அம்மையாரும்" எனும் கட்டுரையை வழி மொழிந்து எழுதப்பெறும் குறுங்கட்டுரை.)

பின்னாளில் காரைக்கால் அம்மையார் எனப் போற்றப்பெற்ற புனிதவதிக்கும் அவருடைய கணவனார் பரமதத்தனுக்கும் இடையே இடைவெளிகள் இருந்திருத்தல் வேண்டும். இவ்விடைவெளிகளை நாகரிகம் கருதி சேக்கிழார் சொல்லாது விட்டனர் போலும். ஒரு முதன்மையான காரணமும் பரமதத்தன் புனிதவதியாரை விட்டு நிலையாக விலகியமைக்குக் காரணமாக இருக்குமோ என்று தோற்றுகிறது. அக்காரணம் சமயம் சார்ந்ததாக இருத்தல் கூடும்.

பரமதத்தன் புனிதவதியாரைப் போலச் சைவக் குடும்பத்தைச் சாராத சமணனாக இருந்திருத்தல் வேண்டும். தத்தன் எனும் பெயர் சமணச் சார்பினது ஆகும். இதற்கு மறுதலையான பெண்பால் பெயர் தத்தை என்பதாகும். பெருங்கதையில் இடம் பெற்றுள்ள வாசவதத்தை ஒரு சமணப் பெண்ணாவாள். தத்தை, தத்தா, தத் எனும் பின்னொட்டுகளைச் சமணர்கள் இன்றும் சூட்டிக் கொள்கின்றனர். தத் (Dutt) எனும் பின்னொட்டு வங்கச் சமணக் குடும்பங்களில் வழங்குவதாகும். இவற்றையும் சேக்கிழார் சொல்லியும் சொல்லாதும் விட்ட சில காரணங்களையும் எண்ணிப் பார்க்கும்போது பரமதத்தன் சமணக் குடும்பத்தினனாக இருக்க மிக வாய்ப்பு இருக்கிறது. எனவேதான் ஊரில் இருந்தும் வீட்டில் இல்லாத நேரத்தில் வருகை தந்த

"பண அரவம் புனைந்து அருளும்
பரமனார் திருத்தொண்டர்க்குப்" (பெரியபுராணம் 1733)

புனிதவதி விருந்தோம்பியதையும் தமக்கு எனக் கொடுத்தனுப்பிய மாம்பழத்தை வழங்கியதையும் பரமதத்தன் விரும்பவில்லை போலும்.

சேக்கிழார், அம்மையார் புராணத்தை 1720 தொடங்கி 1782 முடிய 63 பாடல்களில் வரைந்துள்ளார். புனிதவதியைக் குறிப்பிட்டுச்

சுட்டும் இடங்களிலெல்லாம் அவர் சைவக் குடும்பத்தைச் சார்ந்தவர் என்பதைத் தொடர்ந்து பல முறை கூறுகிறார்.

விடையவர் பால் அன்புடன் அல்கிய 1720
(சிவத்)தொண்டர்வரின் தொழுது 1721
பொருவிடையார் திருவடிக்கீழ் ஓங்கிய
அன்புறு காதல் ஒழிவின்றி மிகப் பெருக 1730

என்பன முதலான இடங்களில் புனிதவதியின் சைவ சமயச் சார்பை வெளிப்படையாகக் குறிப்பிடுகிறார். ஆனால் பரமதத்தனையோ அவனுடைய தந்தை நாக நிதிபதியையோ (1724) அறிமுகப்படுத்தும் இடங்களில் சிவமதச் சார்பைக் குறிப்பாகக் கூடச் சுட்டவில்லை. பின்னாளில் கடல்மிசை வங்கம் ஒட்டிப் பாண்டி நாட்டுக்குத் திரும்பிப் புதிய மடமகள் தன்னை மணம் முடித்த நிலையிலும் பரமதத்தனின் சமயச் சார்பு வெளிப்படையாகக் குறிக்கப்பெறவில்லை.

இன்னொரு குறிப்பும் பரமதத்தனின் சமயம் சமணமாக இருக்குமோ என்ற கருத்தை வலுப்படுத்துகிறது. புனிதவதியின் ஊர் காரைக்கால். பர்மதத்தனின் ஊர் நாகப்பட்டினம். பரமதத்தன் அயல்நாடு சென்று திரும்பி வந்து நிலையாகத் தங்கிய இடம் பாண்டிய நாடு. பாண்டிய நாடு காரைக்கால் அம்மையார் வாழ்ந்த கி.பி. 6ஆம் நூற்றாண்டில் தமிழ்நாட்டுச் சமணத்திற்குத் தலைமை இடமாக இருந்தது. புகழ் பெற்ற சமணரின் திரமிளசங்கம் கி.பி. 575இல் மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கியது. காரைக்கால் சோழ நாட்டின் ஒரு பகுதியாக இருந்தது. சோழ நாட்டில் சைவம் மேலோங்கியிருந்தது. இச்செய்தியைப் பெரியபுராணத்திலேயே இடம்பெற்றுள்ள சோழநாட்டு மங்கையர்க்கரசியார் சைவ சமயத்தைச் சார்ந்திருந்தவர் என்பதும், அவர் பாண்டிய அரசன் நெடுமாறனுக்குத் திருமணம் செய்விக்கப்பெற்றார் என்பதும், பாண்டியன் சமண சமயத்தினனாக இருந்தான் என்பதும், திருஞானசம்பந்தர் காலத்தில் மங்கையர்க்கரசியார் முயற்சியில் பாண்டியன் சமணத்திலிருந்து சைவத்திற்கு மாறினான் என்பதும் வரலாறு. (பெரிய புராண எண்.34) இவ்வரலாறு பெரியபுராணத்தில் இடம்பெற்றுள்ள திருஞானசம்பந்தர் புராணத்தில் விரிவாகச் சேக்கிழாரால் விளக்கப்பெற்றுள்ளது. அன்றிருந்த தமிழகச் சூழலும் பரமதத்தன் அயல்நாட்டிலிருந்து திரும்பியவுடன் சைவம் தழைத்திருந்த சோழ நாட்டை விடுத்துச் சமண சமயம் செழிப்பாக இருந்த பாண்டி நாட்டிற்குத் திரும்பி மறுமணம் செய்துகொள்ள வாய்ப்பாக இருந்தது. எனவே சைவ

சமயம் சார்ந்த புனிதவதியாரிடமிருந்து அவரது கணவனாகிய பரமதத்தன் சமயத்தாலும் வேறுபட்டிருந்தான்; முரண்பட்டிருந்தான் என்று கருத இடமுண்டு.

தமிழ் இலக்கிய மரபின்படியும், தமிழ் மக்கள் பண்பாட்டின்படியும், தமிழ்க் குடும்ப அமைப்பின்படியும் அயலார் வரும்போது, கணவர் உள்ளூரில் இருக்கும் நாள்களில் மனைவி தனியாக விருந்தோம்புவது வழக்கம் இல்லை. கணவரை அருகிலிருத்திச் சேர்த்து விருந்தோம்புவதே வழக்கம். கோவலனைப் பிரிந்திருந்த கண்ணகி கணவனது பிரிவால் தான் விருந்தோம்ப இயலாது தவித்தமையைத் தெரியப்படுத்தி உள்ளாள்.

"எழுகென எழுந்தாய் என்செய்தனை" என்று மதுரைப் புறநகர் பகுதியில் அன்புடன் வினவிய கோவலனுக்குக் கண்ணகி விடையளிக்கும்போது

அறவோர்க்கு அளித்தலும் அந்தணர் ஓம்பலும்
துறவோர்க்கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை

என்று விடையளிக்கிறாள். (சிலம்பு 16, கொலைக்களக் காதை, அடிகள் 70-73) கண்ணகியின் விடையில் கணவன் அருகில்லாதபோது விருந்தினரை அன்புடன் வரவேற்று விருந்தோம்பும் வாய்ப்பை இழந்து நின்றேன் என்ற குறிப்பு இடம்பெற்றிருத்தல் நோக்கத்தக்கது.

தமிழனாகிய கம்பனும் தான் வடித்த இராமாயணத்தில் சீதையும் கணவன் அருகில்லாமையால் விருந்தோம்ப இயலாது தவித்தாள் என்று பதிவு செய்துள்ளார். சுந்தரகாண்டம் காட்சிப் படலத்தில் இடம்பெற்றுள்ள சீதையின் சோகத்தைப் பின்வருமாறு அனுமனின் பார்வையில் கம்பர் வருணிப்பார். (காட்சிப்படலம் 344).

"அருந்தும் மெல் அடகு ஆர் இட
 அருந்தும்?" என்று அழுங்கும்;
"விருந்து கண்டபோது என் உறுமோ?
 என்று விம்மும்;
"மருந்தும் உண்டுகொல் யான்கொண்ட
 நோய்க்கு?" என்று மயங்கும்"
இருந்த மா நிலம் செல் அரித்து
 எழவும் ஆண்டு எழாதாள்.

இன்றும்கூட தமிழ்க் குடும்பங்களில் கணவர் ஊரிலிருக்கும்போது அவருடன் சேர்த்தே பெண்டிர் வந்த விருந்தினரை ஒருசேர அமர வைத்து விருந்தோம்புவது வழக்கமாக உள்ளது. பெரியபுராணத்தில் உள்ள வேறு சில நிகழ்வுகளும் கணவனும் மனைவியும் சேர்ந்து சிவனடியாருக்கு விருந்தோம்பியதைக் குறிப்பிட்டுக் காட்டுகின்றன. (குறிப்பு : கணவர் தம் மனையாளுடன் விருந்தோம்பிய நிகழ்வைக் காட்டும் திருத்தொண்டர் பெயரும் புராண எண்ணும்; 9 இயற்பகை நாயனார், 10 இளையான்குடி நாயனார், 31. அப்பூதி அடிகள் நாயனார், 42 சிறுத்தொண்ட நாயனார், 50 கலிக்கம்ப நாயனார். (இந்நிலையில் கணவராகிய பரமதத்தன் ஊரில் இருக்கும்போது மதிய உணவுடன் சேர்த்து உண்பதற்காக இரு மாம்பழங்களைக் கொடுத்து அனுப்பியிருக்கும் (1732) சூழலில் வீடு தேடி வந்த முன்பின் அறிமுகம் இல்லாத சிவனடியார்க்குப் புனிதவதியார் தனியாக விருந்தோம்பியது ஏன் என்பதைச் சேக்கிழார் வெளிப்படப் புலப்படுத்தவில்லை. அதற்குக் காரணம் சமண சமயத்தைச் சேர்ந்த கணவன் பரமதத்தன், மனைவியாகிய புனிதவதி சிவனடியார்க்கு விருந்தோம்புவதை விரும்பமாட்டான் என்பது கருத்தாக இருக்கலாமோ?

> வணிகனும் தன்னைப் புக்க மாங்கனி பின்னைக் காணான்
> தனிவரும் பயமேற் கொள்ள உள்ளமுந் தடுமாறெய்தி
> அணிகுழ லவரை வேறோர் அணங்கெனக் கருதி நீங்கும்
> துணிவுகொண் டெவர்க்குஞ் சொல்லான் தொடர் வின்றி
> ஒழுகு நாளில்
>
> (பெரியபுராணம் 1747)

எனச் சேக்கிழார், பரமதத்தன், மனைவி புனிதவதியுடன் ஒட்டாது விலகியிருந்ததைக் குறிப்பால் புலப்படுத்துகிறார். பாண்டி மாநகர் செப்பருங்கன்னியை மணமுடித்து (பெரியபுராணம் 1751) பெறலரும் திருவினாளை பெருமணம் புணர்ந்து (பெரியபுராணம் 1752) பெருகுஒளி விளக்குப் போலோர் பெண் குழந்தையும் (பெரியபுராணம் 1753) பெற்றெடுத்துள்ளான் என்பதையும் இணைத்துச் சிந்திக்க.

சமையற்காரரும் ஆசிரியரும்

சமையற்காரர்களின் திறமையைப் பொறுத்துச் சமையலின் சுவை அமைவதுபோல, ஆசிரியர்களின் திறமையைப் பொறுத்தே மாணவர்களின் எதிர்காலம் அமையும்.

– அருள்நெறித்தந்தை

தண்டியடிகள் வரலாறு உணர்த்தும் சிந்தனைகள்

(முனைவர்.திருமதி. கோமதி சூரியமூர்த்தி)

சைவத்திருமுறைகளில் பன்னிரண்டாம் திருமுறையாக விளங்குவது சேக்கிழார் அருளிச்செய்த பெரியபுராணம் என வழங்கப்படும் திருத்தொண்டர்புராணம் ஆகும். இப்புராணம் 63 சிவனடியார்கள், 9 தொகையடியார்கள் பெருமையை உணர்த்துவதாகும். அப்புராணத்தில் போற்றப்படும் நாயன்மார்களுள் ஒருவர் தண்டியடிகள் நாயனார். இவருடைய வரலாற்றைச் சேக்கிழார் 26 செய்யுட்களில் விவரிக்கின்றார். திருவாரூர்ப் பிறந்தாரெல்லாம் சிவகணங்கள் என செப்புவர். தண்டியடிகள் அத்தகைய சிறப்புடைய திருவாரூரில் பிறந்தவர். பிறக்கும் பொழுதே புறக்கண் பார்வை இழந்தவர். இவரை,

> "தண்டியடிகள் திருவாரூர்ப் பிறக்கும் பெருமைத் தவமுடையார்
> அண்டவாணர் மறைபாட ஆடுஞ் செம்பொற்கழல் மனத்துக்
> கொண்ட கருத்தின் அகநோக்கும் குறிப்பேயன்றிப் பிறநோக்கும்
> கண்ட உணர்வு துறந்தாற்போற் பிறந்தபொழுதே கண்காணார்"
>
> (தண்டியடிகள் புராணம். செ.1)

என்று சேக்கிழார் குறிப்பிடுகின்றார். இறைவனின் உருவை முகத்தில் கண்கொண்டு காண்பதைவிட, அகத்தில் கண்கொண்டு காண்பதே ஆனந்தம் என்பார் திருமூலர். தண்டியடிகள் அகத்தில் அரனார் நினைவுடன், புறத்தும் உடம்பால் சிவத்தொண்டு செய்யும் பண்பினர். நாளும் பூங்கோயிலை அடைந்து புற்றிடம் கொண்ட புண்ணியரைத் தொழும் வழக்கம் உடையவர்.

அத்திருக்கோயிலின் மேற்குப் பக்கத்திலுள்ள "கமலாலயம்" என்ற திருக்குளத்தின் பக்கங்களில் எங்கும் அமணர்கள் தங்கள் பாழிகளை அமைத்தமையால் குளம் தூர்க்கப்பட்டுக் குறைபாடுடையதாயிற்று. அந்நிலை அறிந்த தண்டியடிகள் குளத்தை அகலமாகவும், ஆழமாகவும் பெருகத் தோண்ட உள்ளத் துணிவு கொண்டார். குளத்தில் ஒரு தூணும், கரைமேல் ஒரு தூணும் நட்டார். இரண்டடிற்கும் இடையே கயிறு கட்டினார். குளத்திலிருக்கும் மண்ணைக்

கூடையில் வெட்டிப் போட்டுக் கயிற்றைப் பிடித்துக்கொண்டே வந்து கரையில் கொட்டுவார். இடைவிடாது இச்செயலை திருவைந்தெழுத்தை ஓதிக்கொண்டே செய்வார்.

தங்கள் இருப்பிடங்களுக்கு இதனால் இடையூறு உண்டாகும் எனக் கருதிய சமணர்கள் தண்டியடிகளிடம் வந்து, இவ்வாறு மண் தோண்டுவதால் எறும்பு முதலிய உயிர்கள் இறந்துபடுமே என்றனர். தண்டியடிகள் சிவத்தொண்டாகிய இதனால் எவ்வுயிர்க்கும் தீங்கு நேராது என்றார். சமணர்கள் நாங்கள் கூறும் அறச்சொல்லைக் கேளாத உனக்குக் கண்ணைப் போலக் காதும் பயனற்றுப் போயிற்றோ என இகழ்ந்தனர். மனம் வருந்திய தண்டியடிகள் அவனருளால் நம் நிலை மாறினால் என் செய்வீர்கள் என வினாவினார். சமணர்கள், "அப்படி நீ கண்ணொளி பெற்றால், நாங்கள் இவ்வூரில் இருக்கமாட்டோம்" என்று கூறி, அவர் நட்டிருந்த தூண்களைப் பிடுங்கி எறிந்து, கயிற்றையும் எடுத்துக் கொண்டனர்.

தண்டியடிகள் திருக்கோயிலினுள் சென்று இறைவன் முன் வருத்தத்துடன் முறையிட்டார். அன்றிரவு அரனார் அரசன் கனவில் தோன்றி, "தண்டி நமக்குத் திருக்குளப்பணி புரிகின்றான். அதனைச் சமணர்கள் தடுக்கின்றனர். நீ போய் அவன் கருத்தை முற்றுவிப்பாயாக" என்றருளி மறைந்தார். மறுநாள் மன்னர் கோயிலுக்குச் சென்று இருதரத்தாரையும் விசாரணை செய்தான்.

அனைவரும் கரையில் நிற்க, தண்டியடிகள் குளத்தில் இறங்கி, "நான் சிவனார்க்கு அடிமையெனில் கண் பெறுவேனாக" என ஐந்தெழுத்து ஓதி மூழ்கி எழுந்தார். என்னே அதிசயம்! அரனாரருளால் தண்டியடிகள் கண்ணொளி பெற்றார். சமணர்கள் கண்ணொளி நீங்கினர். கண்ட அரசன் தண்டியடிகளைக் கைகூப்பி வணங்கினான். ஒப்பந்தப்படி சமணர்கள் ஊரைவிட்டுப் பலவாறு துன்புற்று நீங்கினர். தண்டியடிகள் தாம் தொடங்கிய திருப்பணியைக் குறைவற முடித்தார். அரசன் அவர்க்கு வேண்டும் வகையில் உதவி புரிந்தான். இறுதியில் தண்டியடிகள் சிவனார் திருவடி நீழலை அடைந்து இன்புற்றார்.

தண்டியடிகள் வரலாறு உணர்த்தும் உண்மைகள் பின்வருமாறு.

1. திருக்குளம் தோண்டுதல், தூய்மை செய்தல் முதலியன சிவபுண்ணியச் செயல்களாகும்.
2. சிவபுண்ணியச் செயல்கள் சிவசிந்தனையுடன் செய்யப்பட வேண்டும்.
3. திருப்பணி செய்ய (வாழ்வில் முன்னேற, வெற்றிபெற) ஊனம் தடையன்று.
4. ஊனமுற்றோர்க்கு உள்ளத்தில் உறுதி வேண்டும்.
5. ஊனமுற்றோரை மனம் வருந்தும்படி அவமதித்தல் கூடாது.
6. அவ்வாறு அவமதிப்போர் அல்லல் அடைவர்.
   "பிறர்க்கு இன்னா முற்பகல் செய்யின் தமக்கு இன்னா
   பிற்பகல் தாமே வரும்" (குறள், 319) என்பது
   வள்ளுவர் வாய்மொழி.
7. திக்கற்றவர்கட்குத் தெய்வமே துணை என நம்பி, ஊனம் உற்றோர் கடவுளை நம்பினால் கைவிடப்படாது காக்கப்படுவர்.
8. ஊனமுற்றோரின் குறை விசாரித்த முறை செய்தல் மன்னனின் கடமைகளுள் ஒன்று.
9. இட ஆக்கிரமிப்பு பற்றித் தகராறு வந்தால், இரு திறத்தாரையும் விசாரித்து நடுநிலைமையுடன் தீர்ப்பளித்தல் அரசியலறம் ஆகும்.

கண்ணின் மணியான ஒளியின்றிக் கயிற்றைத் தடவி வழிகண்டு, திருக்குளம் தோண்டிய தண்டியடிகளை, அளவில்லாத பெருமையுடைய "திருத்தொண்டர்" எனச் சேக்கிழார் போற்றுகின்றார். தண்டியடிகள் குருபூஜை நாள் பங்குனி சதயம் ஆகும்.

> உரிமையைக் கடமையாகச் செய்தால்தான் உரிமை சிறக்கும். உரிமை மட்டும் இருந்து கடமை சிறக்கவில்லையானால் அந்த உரிமையும் சிறப்பிழக்கும்.
>
> – அருள்நெறித்தந்தை

சிறப்பாசிரியர் தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் கலந்துகொண்ட
மும்பை நிகழ்ச்சிகள்

4.4.08

காலை 9-11	சென்னையிலிருந்து விமானம் மூலம் மும்பை பயணம்

4.4.08 வெள்ளி

மாலை 6.30	மும்பை சிட்டாவில் திருச்செம்பூரில் பூரணகும்ப மரியாதை வரவேற்பு. **ஸ்ரீ சுப்பிரமணிய சமாஜம் முருகன் கோவில்** சிறப்பு வழிபாடு.
7.00 மணி	நவி மும்பையில் பூரணகும்ப மரியாதை வரவேற்பு. தமிழ்ச் சங்கத்தில் சிறப்புச் சொற்பொழிவு **"திருவாசகம்"**

5.4.08 சனி

காலை 11 மணி	மும்பையில் புகழ்பெற்ற சித்திவிநாயகர் கோவில் சிறப்பு வழிபாடு.
காலை 11.30	நல்லி சில்க்ஸ் வரவேற்பு.
காலை 12.00 மணி	மும்பையில் **அருள்மிகு மகாலெட்சுமி திருக்கோவில்** சிறப்பு வழிபாடு.
மாலை 7 மணி	பம்பாய்த் தமிழ்ச் சங்கத்தில் பூரணகும்ப மரியாதை வரவேற்பு.
மாலை 7-8 மணி	சிறப்புச் சொற்பொழிவு அமரர் சு. கந்தசாமி நினைவு அறக்கட்டளைச் சொற்பொழிவு **"தொண்டர் தம் பெருமை"**

6.4.2008

காலை 10 மணி	பம்பாயில் மைசூர் அசோசியேசன் கலையரங்கில் சீர்வரிசை **"சண்முகராசா"** குடும்பத்தினரின் **"தமிழ் லெமூரியா"** மாதஇதழ் வெளியீட்டு விழா.
மாலை 7-8.15	பம்பாய்த் தமிழ்ச் சங்கத்தில் சிறப்புப் பேருரை "குறள் நெறி"

சிந்தனை வட்டம்

இளங்கோ அடிகளாரின் மனமாற்றத்திற்கு சோதிடர் கூற்று எவ்வாறு உதவியது; புரட்சி என்றால் என்ன என்பதையும் அடிகளார் விளக்கியிருப்பது அற்புதம்.

நான் சிவகங்கை இராமநாதபுரம் புதுக்கோட்டை மாவட்டங்களின் கிழக்குப் பகுதிகளில் பணிபுரியும் போது மூர்க்கத்தனமான செயல்களுக்கு ஒரு முடிவே இருக்காதா என்று ஏக்கப்பெருமூச்சுவிட்டேன். இந்தப் பகுதியெல்லாம் உள்ளடக்கி குன்றக்குடியிலேயே ஒரு "கன்னிமரா"வையே ஏற்படுத்தினால் சித்தம் தெளியும் என்பது என் அனுபவம். வன் செயல்களையும் மென்மையாக மாற்றும் பண்பு நூலகத்திற்கு உண்டு. பிறப்பு வழிபட்ட நிலை மாறும்

பேதமை, புல்லறிவாண்மை விளக்கம் மிகவும் பாராட்டக்கூடியது.

"மக்கள் சிந்தனை"யில் உள்ள எல்லாப் படைப்புகளும் மனதிற்கு இதமாய் இருக்கின்றன.

– அ. உசேன் மஸ்தான், அறந்தாங்கி.

மக்கள் சிந்தனை இதழில், அடிகளாரின் "ஆன்மீகத் தடம்" சிறப்புற அமைந்து இருந்தது.

பாவலர்மணி ஆ. பழம்நீ எழுதிய "கண்ணகியும் காரைக்காலம்மையாரும்" என்ற ஒப்பியல் கட்டுரை படித்து மிகமிக மகிழ்ந்தேன். இதுபோன்ற இலக்கியக் கட்டுரைகள் தமிழ் இதழ்களில் வெளிவர வேண்டும். "மனைப்பதியாகிய வணிகன்" என்ற முத்தாய்ப்பான சொல்லாக்கத்தை வைத்துக் கட்டுரை புனைந்திருக்கிறார் கவிஞர். வளர்க அவர்தம் முயற்சி!

– நாவுக்கரசன், காரைக்குடி.

மக்கள் சிந்தனை மார்ச்சு இதழில், புலவர் ஆ. பழநி அவர்களுடைய கண்ணகி – காரைக்காலம்மையார் பாத்திரப் படைப்பு ஒரு நல்ல ஒப்பீடு; அதுவே கோவலன் – பரமதத்தன் ஒப்பீடாகவும், இளங்கோ – சேக்கிழார் ஒப்பீடாகவும் அமைந்து சுவை கூட்டியது. நன்கு செறிவாக அமைந்திருந்த கட்டுரையில் மாதவியை "சக்களத்தி" என்று சாதாரணச் சொல்லால் குறிப்பிட்டிருப்பதைத் தவிர்த்திருக்கலாம்.

– மு. பழனிஇராகுலதாசன், தேவகோட்டை

மார்ச்சு மாத மக்கள் சிந்தனை இதழில் திருவண்ணாமலை அர்ச்சகர் பயிற்சிப் பள்ளி பற்றி விரிவாக எடுத்துக்கூறிய பாங்கு மிக நன்று. எல்லாப் பிரிவினைச் சேர்ந்த மாணவர்களும் அர்ச்சகர் பள்ளியில் பயின்றுவரும் செய்தி மிக அருமை.

பிப்ரவரி மாத இதழில் மேலட்டைப் படம் மிக நன்று. 28.01.08ல் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் தாங்கள் ஆற்றிய பேருரையின் முக்கியப் பகுதிகளை மக்கள் சிந்தனையில் பிரசுரித்தால் பல ஆயிரம் அன்பர்களுக்கு பயன்படும்.


– V.G. தெய்வேந்திரன், அருப்புக்கோட்டை

அன்பான வேண்டுகோள்!

சமுதாய மாமுனிவராகத் திகழ்ந்த நமது அருள்நெறித்தந்தை தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களின் ஆழமான சிந்தனைகளை அடியொற்றி நடைபோடும் "மக்கள் சிந்தனை" மாத இதழ் மேலும் பலம் பெறுவதற்குத் தங்களின் ஆதரவு தேவை. நமது கருத்து பரவலாக மக்களைச் சென்றடைய இதழ் அவசியம்.

ஆயுள் சந்தாவாகவோ, அல்லது ஆண்டுச் சந்தாவாகவோ அல்லது புரவலர் தொகையாகவோ மக்கள் சிந்தனை இதழுக்கு வழங்கி மக்களின் சிந்தனைகளை அகம்கொண்டு வெளிவர உதவுங்கள். "மக்கள் சிந்தனை"யின் பணி சிறப்புடன் தொடர வாசகராக, படைப்பாளராக சந்தாதாரராக விளம்பரதாரராக மாறுங்கள்; இன்றே சமய சமுதாயப் பணியை வலிமைப்படுத்துங்கள்.

- ஆசிரியர்




அருள்நெறி முழக்கம்

ஆசிரியர் :
தவத்திரு குன்றக்குடி அடிகளார்

விலை : 40/-
பக்கங்கள் : 96பக்கங்கள்

அருள்நெறி பதிப்பகம்
குன்றக்குடி - 630 206
சிவகங்கை மாவட்டம்





சமய வாழ்வு

விலை : ரூ. 40/-
பக்கங்கள் : 176 பக்கங்கள்

காற்றில் வந்த கருத்துமழை

விலை : 70/-
பக்கங்கள் : 176 பக்கங்கள்

ஆசிரியர் : தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்

திருமாறன் பதிப்பகம்
7/8 பீட்டர்ஸ் குடியிருப்பு
இராயப்பேட்டை
சென்னை - 600 014

MAKKAL CHINTHANAI - April 2008 **Price Rs. 5-00**
Date of Publication 20-04-2008
Register of News Paper for India No. 85913/81 Register No. KKD/04/2006-2008

பெறுநர்

திரு ஆதீனகர்த்தர் அவர்கள்
கோவிலூர் ஆதீனம்
கோவிலூர்
காரைக்குடி (வழி)

அவர்கள்

அச்சிட்டோர் : சண்முகநாதன் அச்சகம், குன்றக்குடி. ✆ : 264166